ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT



எனது இலக்கம;-PS/SB/Circular(2022)/02 சுற்றறிக்கை இலக்கம் PS/SB/Circular/11/2022

2022 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள்/மாவட்ட செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கும்,

**உச்ச நீதிமன்ற நீதி அரசர்கள் , நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன் கடித கொடுக்கள் வாங்கள்களை மேற்கொள்ளல்.**

அரச அல்லது அரச உத்தியோகத்தர்கள் தரப்பினர்களாகும் நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது அதனுடன் தொடரபான விடயங்கள் சம்பந்தமாக அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்கள அல்லது அதற்கு கீழ் நிலையில் உள்ள உத்தியோகத்தர்களினால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கௌரவ பிரதம நீதியரசர் உள்ளிட்ட உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு அல்லது நீதிமன்ற உத்தியோகத்தர்கள் (மேல் நீதிமன்ற நீதியரசர்கள்,மாவட்ட நீதியரசர்கள் மற்றும் மாஜிஸ்திரேட் நீதவான்கள்)உடன் நேரடியாக கடித கொடுக்கள் வாங்கள்கள் செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதோடு, அவ் விடயங்கள் தொடர்பாக தாபனக் கோவையின் XXVII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்பான பொது நிர்வாக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய சட்டமா அதிபர் திணைக்களத்துடன் மாத்திரம் கடித கொடுக்கள் வாங்கள்களை செய்ய கவனத்திற் கொள்ள வேண்டும்.

மேற்போந்த விடயங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கடித கொடுக்கள் வாங்கள்கள் செய்வதாயின் அக் கடித கொடுக்கள் வாங்கள்கள் சனாதிபதி செயலகத்தினூடாக மாத்திரம் செய்தல் வேண்டும்.

நீதி அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனங்களினால் தமது விடய எல்லைக்குரிய அன்றாட பொது நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களோடு செய்யும் கடித கொடுக்கள் வாங்கள்கள் தொடர்பாகவும் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாகவும் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது என்பதையும் கவனத்திற கொள்ளவும்.

**ஒப்பம்/ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

பிரதி
(1) பிரதமரின் செயலாளர்
(2) அமைச்சரவைச் செயலாளர்
(3) கணக்காய்வாளர் நாயகம்